ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1722/2 - 2011 සැප්තැම්බර් 05 වැනි සඳුදා - 2011.09.05
*1722/2 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

தொடர்பு/இல.: ஈடி/05/69/1/1/102.

**1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் பயிலுநர் கல்லூரி (குறைநிரப்பு ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 10 ஆவது வாசகத்தின் கீழ் விதிக்கப்படும் உத்தரவு**

கா/பட்டபொல மெதடிஸ்த சிங்கள கலவன் பாடசாலை

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆகிய நான், 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் பயிலுநர் கல்லூரி (குறைநிரப்பு ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 10 ஆவது வாசகத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய செயற்பட்டு, 13109 ஆம் இலக்க 1962.05.14 ஆந் திகதிய இலங்கை அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமான பத்திரிகை அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டு இல. 14197 ஆம் இலக்க 1964.10.10 ஆந் திகதிய இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தலில் மறுசீரமைக்கப்பட்டுக் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களுக்கு மட்டும் உரியதாகக் கூடியவாறு 2011 ஓகத்து மாதம் 29 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

பந்துல குணவர்த்தன,
கல்வி அமைச்சர்.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
ஸ்ரீ ஜயவர்த்தனபுரக் கோட்டை,
பத்தரமுல்லை.
2011, ஓகத்து 29.

9 - 602